**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.30 /2019

**23.03.2026**

## P.W.2- போதுமணி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய நான் தான் விவரம் கூறினேன். வாதி கோரிய பரிகாரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பழனிச்சாமி மற்றும் ஆண்டவர் ஆகியோர் எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆண்டவர், அவரது மகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. எனது அப்பா பெயரில் இருந்தாக சொல்லப்படும் சொத்தை எப்போது விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதியும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடபுறம் எனது சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியாது என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:27:47 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.